29th January 1972] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

அது எடுக்கப்பட்டால், மக்களுக்கு நன்மை செய்ததாக இருக்கும். எனவே, அதைப்பற்றி கவனிக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை நிறைவு செய்து அமைகிறேன்.

MR. CHAIRMAN : The House will now adjourn and meet again at 4 p.m. on Monday, the 31st January 1972.

The House then adjourned.

APPENDIX I

[Vide answer to Starred Question No. 59 on page 209)

(அ) இந்திய அரசு, சென்னைக்கு அருகில் உள்ள அலமாதியில் மத்திய எருமைப் பண்ணை ஒன்றைத் துவங்கத் திட்டமிட்டுள்ளது.

(ஆ) (1) நான்காவது திட்டக்காலத்தில் இப்பண்ணையை அமைப்பதற்காக இந்திய அரசினால் ரூ. 82.91 லட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

(2) முதல் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் 300 முர்ரா எருமைகள் இனப்பெருக்க வயதடைந்த கிடேரிகள் கொண்ட தொடக்க இருப்பு படிப்படியாக ஏற்படுத்தப்படும். பஞ்சாபிலுள்ள கால்நடை வளர்ப்புப் பகுதிகளிலிருந்தும் பல்வேறு மாநில எருமைப் பண்ணைகளிலிருந்தும் இவை பெறப்படும்.

(3) தொழில் நுட்ப திட்டங்களுக்கு இணங்க மட்டுமே பண்ணைகளில் கால்நடைகள் இனப்பெருக்கம் செய்யப்படும்.

(4) இனவிருத்தி சோதனை, இனவிருத்தித் திறனின் தன்மையைக் கண்டு பிடிக்க நடத்தப்படும். அது அரசு கால்நடை வளர்ப்புப் பண்ணைகள், விந்து சேமிப்பு நிலையங்கள் அனைத்து நாடுகள் கால்நடை வளர்ச்சித் திட்டப் பகுதியில் அதனதன் சிறந்த தன்மையையொட்டி வழங்கப்படும். உள்ளதற்குள் சிறந்தவை பண்ணையின் உபயோகத்திற்காகப் பண்ணையிலே வைத்துக்கொள்ளப்படும்.

(5) இனவிருத்தித் திறனுடைய எருதுகளுக்கும் (தந்தை விலங்கு) அதிகப் பால்தரும் எருமைகளுக்கும் (தாய் விலங்கு) பிறந்த 80 முர்ராக் காளைகள், மாநிலங்கள், யூனியன் நேரடி ஆட்சிப்பகுதிகள் முதலியவற்றுக்குக் கால்நடை வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு நான்காவது ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் இன விருத்திக்கென்று விற்பனை செய்யப்படும்.

(6) சென்னைக்கருகில் உள்ள அரசினர் பாற்பண்ணைக்கு நாள் ஒன்றுக்கு சுமார் 1,000 முதல் 1,200 லிட்டர் பால் கிடைக்கச் செய்யப்படும்.

(7) பண்ணை முழு அளவில் நிறுவப்படும் பொழுது ஆண்டொன்றுக்கு ரூ. 6 லட்சம் வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

(8) பண்ணையின் சிறந்த வகை இனங்களின் இனவிருத்தித் திறன் ஆண்டு ஒன்றுக்கு 2.5 சதவீதத்திலிருந்து 3.5 சதவீதம் ஆக உயரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

[29th January 1972

(9) பண்ணை முழு அளவில் நிறுவப்படும்பொழுது அதில் 750 கால்நடைகள் இருக்கும். இதுவே நாட்டில் உள்ள முர்ரா எருமைப் பண்ணைகளில் பெரியதாக இருக்கும். அறிவியல் முறை வளர்ப்புப் பண்ணையாக இது இருக்கும். அறிவியல் முறை வளர்ப்புப் பண்ணையாக இது இருக்குமேயன்றி வணிகத் தன்மை கொண்ட பண்ணையாக இருக்காது.

(10) இந்தப் பண்ணை, பாற்பண்ணை மந்தைகளை நிர்வகித்தல், தீவினப் பயிர்கள், அறிவியல் முறையில் கால்நடை வளர்ப்பு ஆகியவற்றில் ஒரு கட்டிட விளக்கப் பண்ணையாகத் திகழும். இப்பண்ணை, மற்ற நாடுகளில் இன வளர்ப்புக் காரியத்திற்காக இனவிருத்திச் சோதனை செய்யப்பட்ட முர்ரா எருமைக் கடாக்களையும் வழங்கலாம்.

Appendix II.

[Vide answer to Starred Question No. 60 on page 211)

தஞ்சாவூர் மாவட்டத்தில் சிறப்பு தீவிர குடும்ப நல இயக்கமொன்றை செயல்படுத்துவதற்காக 20-10-1971 முதல் 14-11-1971 முடிய பிரச்சார இயக்கமும் 15-11-1971 முதல் 10-1-1972 முடிய சேவை இயக்கமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. 15,000 அறுவை சிகிச்சைகள் செய்ய வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதற்கான தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளரின் செயற்குறிப்பு ஒன்றினை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த இயக்கத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் கீழ்க்கண்ட கூடுதல் சலுகைகள் அளிக்கப்படுகின்றன :—

(1) ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் உடல்நல நிலையங்களிலும் (Health Resorts) தங்கி அறுவை சிகிச்சை செய்துகொண்ட ஒவ்வொரு நபருக்கும் சிறப்பு சாப்பாட்டுச் செலவுக்காக ஒவ்வொரு நாளும் ரூ. 3.50 கொடுக்கப்படுகிறது.

நிலைமை சிக்கலாகி மேலும் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற வேண்டியவர்களுக்கு மேலும் நான்கு நாட்களுக்கு உணவிற்காக மேற்கண்ட விகிதத்தில் செலவு அனுமதிக்கப்படுகிறது. அவ்வாறு தங்கியிருப்பவர்களின் எண்ணிக்கை 5 சதவீதத்திற்கு மேற்படக் கூடாது.

(2) அறுவை சிகிச்சை செய்துகொண்ட ஒவ்வொரு நபருக்கும் ரூ. 3 வீதம் போக்குவரத்து செலவுக்காக ரூ. 45,000 அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

(3) அறுவை சிகிச்சை செய்துகொண்ட ஒவ்வொரு நபருக்கும் கூடுதலான ஈடுசெய்யும் நிதியை அளிப்பதற்காக ரூ. 1.50 லட்சத்திற்கு மேற்படாமல் நன்கொடை வசூலிப்பதற்காக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளருக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோன்று தீவிர குடும்ப நலத்திட்ட இயக்கத்தை செயல்படுத்தும் பணியில் ஈடுபடும் மருத்துவ அதிகாரிகளுக்கும் மற்ற ஊழியர்களுக்கும் கீழ்க்கண்ட சலுகைகள் அளிக்கப்படுகின்றன :—

1. மருத்துவ அதிகாரிகள் முழு தினப்படியை பெறுவதற்காக பயண விதிகள் தளர்த்தப்படுகின்றன.